செய்தி வெளியீடு எண்:601 நாள்:12.08.2021

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் திறன் பயிற்சி வழங்க தேர்வு செய்யப்பட்ட தகுதியான பயிற்சி வழங்குநர்களுக்கு நடைபெற்ற வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று திறன் பயிற்சி வழங்குவதற்கான அனுமதி ஆணைகளை வழங்கி விழா சிறப்புரையாற்றினார்.

பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளம் மூலம் வருடம் முழுவதும் இலவசமாக விண்ணப்பிக்க ஏதுவாக 06.08.2021 முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிற் பிரிவுகளில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள பிரிவுகளை கண்டறிந்து அவற்றில் திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து பயிற்சி அளிக்க முன்வருமாறு மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழக இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் திறனுக்கேற்ற வேலைவாய்ப்பினை உறுதி செய்திட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தை பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சி பெற்றவர்களுக்கு உரிய வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கு மிகுந்த அர்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டுமெனவும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கினார் .

மேலும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் திறன் தேவைகளுக்கேற்ப திறன் பயிற்சி நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்ட திறன் பயிற்சி வழங்குமாறும், திறன் பயிற்சி நிறுவனங்கள் பயிற்சியினை கொரோனா பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடித்து நடத்திடுமாறும் அறிவுறுத்தினார்.

இன்று 12.08.2021 காலை 10.30 மணியளவில் டி.எம்.எஸ் தேனாம்பேட்டை வளாக தேசிய சுகாதார இயக்கக கட்டிடத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. C.V. கணேசன், அவர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப அவர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**மேலாண்மை இயக்குநர்**
**தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9